# நீதிபதியின் தகைமையும், நடத்தையும் : ஓர் இஸ்லாமியப் பார்வை

# Qualification and Behavior of Judge: An Islamic Perspective

M.B. Fowzul,

**Abstract:**

*A judge plays a vital role in the institutionalized justice administration. Accordingly, Islam pays profound attention on the qualifications and behaviors of a judge. However, it seems that the Sri Lankan Muslims are not well aware about that. Hence, this study endeavours to explore the qualifications and behaviors of a judge in the Islamic perspective as its main objective. Subsequently, this study reviews the literatures published in the cherished Islamic era and later regarding the Islamic legal system, its administration and the etiquette of the judges (adab al-qulaat). Finally, the findings of this study reveal that a judge must have immense knowledge on the legal system and its administration, creative thinking, appropriate age, behavior of honesty, and maintaining equality and transparency among the litigants. This study can be taken as a guideline for the better structure or reconstruction of the present Qaali Court System in Sri Lanka.*

**Key words**: Islamic Legal System, Judge, Qualification, Behavior

## அறிமுகம்

மனித வரலாற்றில் நீதி என்பது பெறுமானமிக்கதோர் உயர்ந்த பண்பாகும். ஆகவே, அதன் காவலர்களான நீதிபதிகள் சமூக மதிப்பையும், அந்தஸ்தையும் கொண்ட உயர் பதவியுடையோராகவே கணிக்கப்பட்டனர். நீதி செய்வது நபித்துவப் பணி என்று அல் குர்ஆன் காண்பிக்கின்றது. மனித சமூகங்களுக்கு அனுப்பப்பட்ட இறைத் தூதுவர்கள்: இறைத்தூதர்களாக இருந்த அதேவேளை, நீதிபதிகளாகவும் செயற்பட்டுள்ளனர் என்பதை அல் குர்ஆனின் வாசகங்கள் குறிப்பிடுகின்றன (அல்குர்ஆன் 38:26). 'நமது தூதர்களைத் தெளிவான சான்றுகளுடன் அனுப்பினோம். அவர்களுடன் வேதத்தையும், மக்கள் நீதியினை நிலைநாட்ட தராசையும் அருளினோம்' (அல் குர்ஆன் 57:25). 'அல்லாஹ் அருளியதன் அடிப்படையில் அவர்களிடையே தீர்ப்பளிப்பீராக' (அல் குர்ஆன் 05:48) போன்ற அல் குர்ஆன் வாசகங்கள் நபி (ஸல்) அவர்களுக்கு வழங்கப்பட்ட பணிகளில் ஒன்றாக நீதித்துறையும் அமைந்திருந்தது என்பதைத் தெளிவாக விளக்குகின்றன. இதற்கமைய, முற்பட்ட கால சமூகங்களும் அவர்கள் மத்தியில் வாழ்ந்த தகைமை,

ஆற்றல், சிந்தனைத் தெளிவு, தீர்மானமெடுத்தல் என்பவற்றில் புகழ் பெற்றவர்களையே தமது நீதிபதிகளாகக் கொண்டிருந்தனர். ஜாஹிலிய்ய காலப் பிரிவிலும் சமூக நன்மதிப்பைப் பெற்றிருந்தவர்களும், உண்மை, மதிநுட்பம் ஆகிய பண்புகளைக் கொண்டிருந்தவர்களும் நீதி வழங்குபவர்களாக விளங்கினர் என தப்யானி (2000) குறிப்பிடுகிறார். ஆனால், இன்று நீதிபதியின் தகைமை மற்றும் நடத்தை பற்றிய தெளிவின்மையால் அல்லது நீதிபதி நியமனத்தின் போது, இஸ்லாமிய வழிகாட்டல்கள் பின்பற்றப்படாமையினால் நீதியை நிலைநாட்டுவதில் பல தடைகள் ஏற்படுகின்றன. எனவே, இவ்வாய்வு நீதிபதியின் தகைமை மற்றும் நடத்தை பற்றிய இஸ்லாமிய வழிகாட்டல்களை மீளாய்வு செய்கிறது.

**ஆய்வு முறைமை**

இஸ்லாத்தில் நீதிபதியின் தகைமைகள், நடத்தைகள் பற்றிய ஆக்கங்கள் மீதான மீளாய்வு, பகுப்பாய்வை இவ்வாய்வுக் கட்டுரை அடிப்படையாகக் கொண்டுள்ளது. அறபு மொழியில் அமைந்த ஆக்கங்கள் இவ்விடயத்தைப் பெரும்பாலும் கோட்பாடு ரீதியாகவே நோக்க முற்படுகின்றன. இந்த வகையில் ‘‘ஷுரூதுல் காழி’’, ‘‘அதபுல் காழி’’ (நீதிபதியின் தகைமை, நடத்தைக் கோவை) எனும் முன்னோடிக் கால ஆக்கங்கள் நீதிபதிகள் பெற்றிருக்க வேண்டிய தகைமைகள், அவர்களின் தனிப்பட்ட மற்றும் தொழில்சார் நடத்தைகள் பற்றி விபரிக்கின்றன. எனவே, இஸ்லாத்தின் மூல ஆவணங்களான அல் குர்ஆன், அஸ்ஸுன்னா, பிரதான இமாம்களின் கருத்துக்கள், இஸ்லாமிய வரலாற்று அனுபவம், நவீன இஸ்லாமிய சிந்தனையாளர்களின் கருத்துக்கள் என்பனவும் இஸ்லாமிய கண்ணோக்கிற்கான அடிப்படைகளாக அமைகின்றன.

**நீதிபதியின் தகைமை**

நீதிப்பரிபாலனத்தைக் கடமையாகக் காணும் இஸ்லாம், நீதி செலுத்துகின்ற நீதிபதியின் தகைமை பற்றிப் பிரஸ்தாபிக்கின்றது. நீதியை வழங்கவும், அதன் வெளிப்படைத் தன்மையை உறுதிப்படுத்தவும் தகைமையுடையோரே நீதிபதியாக நியமனம் செய்யப்படுவதை அது உறுதி செய்கிறது. நபி (ஸல்) அவர்களிடம் அபூதர் (ரழி) அவர்கள் தன்னை நீதிபதியாக நியமிக்குமாறு வேண்டியபோது, ‘நீர் பலவீனமானவர். அது அமானிதமானது. அது தகைமை உடையோருக்கும் நேரிய முறையில் நிறைவேற்றுவோருக்குமன்றி அதன் மறுமைப் பயன் இழிவாகவும், கைசேதமாகவும் அமையும்’ எனக் குறிப்பிட்டமை (பைஹகீ, ஹதீஸ்:20707) நீதியை நிலைநாட்டுதலை அமானிதமாகக் காண்கிறது. ‘அமானிதங்களை அதற்குரியோரிடம்

ஒப்படைக்குமாறும் மக்கள் மத்தியில் தீர்ப்பளிக்கும் போது, நீங்கள் நீதியாக தீர்ப்பளிக்க வேண்டும் எனவும் அல்லாஹ் உங்களுக்கு கட்டளையிடுகிறான்' (அல்குர்ஆன் 04:58) எனும் வாசகம் நீதிபதியின் தகைமை, நடத்தை பற்றிய நியமங்களைத் தெளிவாகவே விளக்குகிறது. நீதி செலுத்துபவர்களிடம் ஏற்படும் தவறு கண்டனத்துக்கும் தண்டனைக்கும் உரியது என ஹதீஸ் குறிப்புக்கள் (அபூதாவூத், ஹதீஸ்:202) காண்பிக்கின்றன.

நீதித்துறையில் ஈடுபடுவோரின் தகைமை பற்றிய கரிசனையும் அதில் ஏற்படும் தவறுக்கான தண்டனை பற்றிய எச்சரிக்கையும் நீதிபதிப் பதவியைப் பெற ஆர்வமூட்டவில்லை. ஹதீஸ், பிக்ஹ் துறையில் தேர்ச்சி பெற்றிருந்த அப்துல்லாஹ் இப்னு உமர் (ரழி) அவர்கள் கலீபா உதுமான் அவர்களின் நீதிபதி நியமனத்திற்கான அழைப்பை மறுத்துவிட்டார். 'இவ்வமானிதத்தைப் பூரணமாக நிறைவேற்றுவதில் தவறுகள் இடம்பெற்று, மறுமையில் இழிவுக்கும் கைசேதத்திற்கும் உள்ளாகிவிடுவேன் என அஞ்சுகிறேன்' என்று அவர்கள் குறிப்பிட்டமை நோக்கத்தக்கது. (வகீஉ, 918)

**கல்வித் தகைமை**

இஸ்லாமிய சட்டவியல் ஒரு நீதிபதியின் தகைமைகளை நீதித்துறையில் அவர் ஈடுபடுவதற்கான நிபந்தனைகளாக விபரிக்கின்றது. அவற்றில் மிகப்பிரதானமானதும் அவசியமானதும் நீதிபதியுடைய சட்டம், அதன் விடயப்பரப்பு பற்றிய அறிவாகும். இந்நிபந்தனையில் இஸ்லாமிய சட்ட நிபுணர்கள் ஒன்றுபடுகின்றனர். நீதித்துறை ஓர் அறிவார்ந்த செயற்பாட்டோடு தொடர்புபட்டிருப்பதனால், அறிவைத் தகைமையாகக் கொள்வதை அல்குர்ஆனிய வாசகங்கள் வலியுறுத்துகின்றன. நீதிபதியாகச் செயற்பட்ட தாவூத் (அலை) அவர்களின் தகைமையாக 'அவருக்கு ஞானத்தையும் தெளிவான விளக்கத்தையும் கொடுத்தோம்' என அல்குர்ஆன் (38:20) குறிப்பிடுகிறது. இஸ்லாமிய வரலாற்றில் அறிவுத் தகைமையே 'ஷுரைஹ் போன்றோர் நீதிபதியாக நியமிக்கப்படுவதற்கு அடிப்படையாக அமைந்தது' எனப்படுகிறது (இப்னுல் கய்யூம், 2002). நீதிபதி பெற்றிருக்க வேண்டிய அறிவின் பரப்பு தொடர்பில் இஸ்லாமிய சட்ட நிபுணர்களிடையே வேறுபட்ட அபிப்பிராயங்கள் நிலவுகின்றன. இஸ்லாமிய அடிப்படை மூல ஆவணங்களான அல் குர்ஆன், அஸ்ஸுன்னா பற்றிய அறிவை ஒரு நீதிபதி பெற்றிருக்க வேண்டும் என்பதில் அவர்களிடையே கருத்தொருமைப்பாடு காணப்படுகிறது எனலாம் (அல் ஹுமைழி, 1989). நீதிபதியின் தீர்ப்பு

இவ்வாவணங்களை அடிப்படையாகக் கொண்டிருப்பது அவசியமாகும் என்பதை அல் குர்ஆன் குறிப்பிடுகிறது. ‘(முஹம்மதே,) அல்லாஹ் உமக்குக் காட்டித்தரும் அடிப்படையில் மக்கள் மத்தியில் நீர் தீர்ப்பு வழங்குவதற்காக உண்மையை உள்ளடக்கிய இவ்வேதத்தை உமக்கு நாம் அருளினோம்’ (அல் குர்ஆன், 04:105). அவ்வாறே, யமன் பிரதேசத்திற்கு நீதிபதியாக நியமனம் பெற்ற முஆத் இப்னு ஜபல் (ரழி) அவர்களுக்கும் நபியவர்களுக்குமிடையிலான கலந்துரையாடல் அல் குர்ஆன், அஸ்ஸுன்னா என்ற மூல ஆவணங்கள் பற்றிய அறிவை நீதிபதி பெற்றிருப்பதன் அவசியத்தை எடுத்துக்காட்டுகிறது[1]. மேலும், நபி (ஸல்) அவர்கள் ஒரு நீதிபதி என்ற அடிப்படையில் வழங்கிய தீர்ப்புக்களையும் ஸுன்னா உள்ளடக்கியிருப்பதால், அது ஒரு நீதிபதிக்கு தனது தீர்ப்பை வடிவமைத்துக் கொள்வதற்கு முன்னுதாரணமாகவும் மூலாதாரமாகவும் அமைய முடியும். அபூபக்ர் (ரழி) அவர்கள் ஒரு பிரச்சினைக்கான தீர்வை அல் குர்ஆனில் அல்லது ஸுன்னாவில் அல்லது நபியவர்கள் வழங்கிய தீர்வில் காணப்படுகிறதா என வினவுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்கள் (துப்யானி,2000) என்பது ஸுன்னாவின் முக்கியத்துவத்தினைக் காண்பிக்கவல்லது.

நீதிபதி பெற்றிருக்க வேண்டிய கல்வித்தகைமைகளுள் ஒன்றாக சிந்தனாத்திறன் கொண்டு தீர்மானித்தலைக் குறிக்கும் இஜ்திஹாதும் கொள்ளப்பட வேண்டும் என்பதில் இஸ்லாமிய சட்ட நிபுணர்களிடையே முரண்பட்ட அபிப்பிராயமுண்டு. மாலிகி, ஷாபிஈ, ஹன்பலி சிந்தனைப் பிரிவினர்களும், ஹனபி சிந்தனைப்போக்குடைய சிலரும் ‘இஜ்திஹாத்’ செய்யும் ஆற்றல் நீதிபதிக்கு அவசியம் என்றே கருதுகின்றனர். பிறிதொரு இமாமை (தக்லீத் செய்யும்) கண்மூடிப்பின்பற்றும் ஒருவர் நீதிபதிக்குத் தகுதியற்றவர் என்பது இவர்களது வாதமாகும் (அல்-ஸுஹைலி, 2002). இச்சாரார் பின்வரும் ஹதீஸைத் தமக்குச் சான்றாகக் கொள்கின்றனர்.

> ‘முஸ்லிம்களின் விடயத்தைப் பொறுப்பேற்கும் உயரதிகாரி, அல்லாஹ்வின் வேதத்தையும் அவனது தூதரின் ஸுன்னாவையும் மிகவும் அறிந்த ஒருவர் இருக்கும் நிலையில், அவரை விடத் தகைமை குறைந்த ஒருவரை அவர் நியமித்தால், அவர் அல்லாஹ்வுக்கும், அவனது தூதருக்கும், முஸ்லிம் சமூகத்திற்கும் மோசடி செய்துவிட்டார் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்’ (பைஹகீ, ஹதீஸ்:18738)

ஹனபி சிந்தனைப் பிரிவின் மற்றொரு பிரிவினர் நீதிபதி 'இஜ்திஹாத்' ஆற்றலைப் பெற்றிருப்பது சிறப்புக்குரியதும் முன்னுரிமை அளிக்கத்தக்கதுமாகும். ஆயினும், நிபந்தனையாகக் கொள்ளத்தக்கதல்ல. நீதித்துறையின் நோக்கமான 'வழக்குகளைத் தீர்த்து உரிமையைப் பெற்றுக் கொடுத்தலை' ஒரு இமாமின் சட்டங்களை தக்லீத் செய்து நிறைவேற்றவும் முடியுமெனக் கருதுகின்றனர் (அல்-ஸுஹைலி, 2002). இதுதவிர, இமாம் இப்னு ஹஸ்ம் அவர்கள் ஒரு முஜ்தஹிதின் தகைமையான அல் குர்ஆனிய சட்டங்கள், ஆதாரபூர்வமான நபி மொழிகள், நாஸிஹ், மன்ஸுஹ் வழிமுறை என்பனவற்றை அறிந்திருப்பதை நீதிபதியும் அறிந்திருக்க வேண்டுமென வாதாடுகிறார். ஷாபிஈ சிந்தனைப் பிரிவைச்சேர்ந்த அறிஞர்கள் குறைந்த பட்சம் ஒரு நீதிபதி தான் தீர்ப்பு வழங்கும் விடயப் பொருளைத் தெளிவாக அறிந்திருத்தல் மூலம், அவர் தான் வழங்கிய தீர்ப்பு இஸ்லாமிய அடிப்படை மூல ஆவணங்களான அல் குர்ஆன், அஸ்ஸுன்னா, இஜ்மா, அவருக்கு முற்பட்ட நீதிபதிகள் வழங்கிய தீர்ப்புக்கள் என்பனவற்றுக்கு முரண்படாதிருக்க முடியும் (அல்-ஷர்ஈனி, 1958). எனக் குறிப்பிடுகின்றனர். இதனை அல்-ஸுஹைலி (2002) பொருத்தமானது என்ற உடன்படுகிறார். இந்த வகையில் ஒரு நீதிபதி சட்டத்தின் விடயப்பொருள், நிகழ்வின் நியாயம் என இரண்டு அம்சங்களோடு தொடர்புபடுகிறார். சிலவேளைகளில் இவ்விரண்டையும் அவர் இணைத்துக் காண வேண்டியுமுள்ளது. எனவே, சட்டத்தின் விடயப்பொருள் பற்றிய போதிய அறிவு, நிகழ்வின் உண்மைத்தன்மையைக் கண்டறிவதற்கான ஆற்றல் என்பன நீதிபதிக்கு அவசியமாகும். இரு தாய்களிடையே குழந்தையின் உரிமை தொடர்பிலான பிணக்கில் சுலைமான் நபியவர்கள் வழங்கிய தீர்ப்பும், இரு நண்பர்களின் உரொட்டிப் பிரச்சினைக்கு அலி (ரழி) அவர்கள் வழங்கிய தீர்ப்பும்[2] நிகழ்வின் உண்மைத் தன்மையினைக் கண்டறிவதற்கான ஆற்றலை எடுத்துக் காட்டுவதாகும்.

ஷரீஆ நீதிமன்றத்திற்கு நீதிபதியாக நியமனம் பெறுவதற்கான தகைமைகளை முஸ்லிம் நாடுகள் வரையறுத்துள்ளன. பல்கலைக்கழகப் பட்டத்துடன், தொழில்சார் பட்டப்பின் டிப்ளொமா கற்கைநெறி அல்லது ஷரீஆ துறையில் சட்டமானிப் பட்டம் அல்லது ஷரீஆ பாரம்பரிய சட்டத்துறை சார்ந்த இரட்டைப் பட்டப்படிப்பு ஆகியவற்றை ஷரீஆ நீதிமன்ற நீதிபதி நியமனத்திற்கான அடிப்படைக் கல்வித்தகைமைகளாக மலேசியா கொண்டுள்ளது (Zin, Najibah M, 2012). இவ்வாறே, ஷரீஆ நீதிமன்ற முறையில் நீதிப்பரிபாலனத்தை மேற்கொள்ளும் ஸஊதி அரேபியாவிலும் பல்கலைக்கழகப் பட்டப்படிப்புச் சான்றிதழைப் பெற்றவர் அல்லது

முறைசாரா ஷரீஆ கல்வியைப் பெற்ற பிரபலங்களும் நீதியமைச்சினால் நடாத்தப்படும் தகைமைப் பரீட்சையில் தேர்ச்சியடைவதன் மூலம் நீதிபதியாக நியமனம் பெறுவதற்குத் தகுதி பெறுகின்றனர் (அப்துல் அஸீஸ், 1990).

**பால்நிலை (ஆண் முன்னுரிமைப் படுத்தப்படல்)**

வரலாற்று ரீதியில் நீதிபதிப்பதவி ஆண்களுக்கே வழங்கப்பட்டு வந்திருக்கின்றது. பெரும்பாலான சிந்தனைப்பிரிவுகளின் கருத்துப்படி ஆணே நீதிபதியாக நியமிக்கப்படுவதற்குத் தகைமை உடையவர். மாலிகி, ஷாபிஈ, ஹன்பலி சிந்தனைப்பிரிவுகள் பெண்கள் நீதிபதியாக நியமிக்கப்படுவதை ஏற்றுக் கொள்ளவில்லை. 'ஆண்கள் பெண்களை நிர்வாகம் செய்பவர்கள்' (அல் குர்ஆன் 04:34) எனும் அல் குர்ஆன் வாசகம் பெண்கள் ஆண்களை நீதி நிர்வாகம் செய்ய முடியாது என்பதைக் காண்பிப்பதாக அல் மாவர்தி வாதிக்கின்றார். 'அவ்விரு பெண்களில் ஒருத்தி மறந்து விட்டால், மற்றொருத்தி நினைவு படுத்துவாள்' (அல் குர்ஆன் 02:282) போன்ற அல் குர்ஆனிய வாசகங்கள் பெண்களின் பலவீனங்களைச் சுட்டிக்காட்டுவதாகக் கொள்ளப்படுகிறது. நபி (ஸல்) அவர்களும் கிலாபா ராஷிதா கால, அதற்குப் பிற்பட்ட கால கலீபாக்களும் பெண்களை நீதிபதியாக நியமிக்கவில்லை என்பதை இப்னு குதாமா கோடிட்டுக் காட்டுகிறார். மேற்குறிப்பிட்ட குர்ஆனிய வாசகங்கள், 'தங்களது விடயத்தை ஒரு பெண்ணிடம் ஒப்படைத்த சமூகம் வெற்றியடையவே மாட்டாது' போன்ற நபிமொழிகள் (புஹாரி, ஹதீஸ்:4425) பெண்களின் தகைமையின்மைக்குச் சான்றாகக் கொள்ள முடியுமென்று அல்-ஷவ்கானி (2002) எடுத்துரைக்கிறார்.

ஆயினும், கோட்பாட்டு ரீதியில் இஸ்லாமிய சட்டவியல் பெண் நீதிபதியாக அமர்த்தப்படுவதை அனுமதிப்பதாகக் கருதுவோரும் உள்ளனர். பெண்கள் சாட்சியம் பற்றிய மேற்கூறப்பட்ட அல் குர்ஆன் வாசகம் பெண்ணைச் சாட்சியாகக் கொள்ள அனுமதிக்கிறது. இதனடிப்படையில் பெண்களை நீதிபதியாகவும் நியமிக்க முடியும். ஆயினும், குற்றவியல் விவகாரங்களில் பெண் நீதிபதியாக நியமிக்கப்பட முடியாது என்பது 'ஹனபி' சிந்தனைப்பிரிவின் கருத்தாகும். அல் குர்ஆனிய வாசகம், நபியவர்களது மரபு தெளிவாக பெண்களைத் தடை செய்வதாக அமையவில்லை என தற்கால இஸ்லாமிய சிந்தனையாளர்கள் கருதுகின்றனர் (யூஸுப், 1986). இஸ்லாமிய ஆரம்ப காலப்பிரிவுகளில் பெண்கள் நீதிபதிகளாக நியமிக்கப்படாமைக்கு அக்கால சமூக நிலைகளே காரணமாகும். ஆணாதிக்க கட்டமைப்பைக் கொண்ட

சமூகத்தில் பெண்கள் பொது வாழ்வில் பங்கு கொள்வது வழக்கமாக இருக்கவில்லை. ஒரு பெண்ணை இஸ்லாமிய சட்டவியல் நிபுணராக அங்கீகரிக்க முடியுமாயின் அப்பெண்ணை நீதிபதியாக நியமிப்பதும் ஏற்புடையதே என இப்னு ஜரீர் வாதிக்கின்றார். அவரின் இக்கருத்து அல் மாவர்தி போன்ற இஸ்லாமிய அறிஞர்களிடையே கடும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதை பின்வரும் குறிப்பு காண்பிக்கிறது. 'இஜ்மாவான ஒரு முடிவுக்கு மாற்றமான இப்னு ஜரீரின் இக்கருத்து பொருட்படுத்தப்பட முடியாதது' என்கிறார் அல்மாவர்தி (1994).

இருபதாம் நூற்றாண்டில் இஸ்லாமிய நாடுகள் பலவற்றில் குடும்பச்சட்டம் போன்ற விவகாரங்களில் பெண்கள் நீதிபதியாக பங்காற்ற அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஆயினும், நீதிமன்ற உயர் பதவிகளுக்குப் பெண்கள் நியமிக்கப்படுவது, தொடர்ந்தும் விவாதங்களையே தோற்றுவித்துள்ளது எனலாம். முஸ்லிம் பெண்கள் அமைப்புக்கள் ஷரீஆ நீதிமன்றத்தின் நீதிபதிப் பதவிக்கு பெண்கள் நியமிக்கப்படுவது தொடர்பில் பலவேறுபட்ட முனைவுகளைத் தொடர்ந்து காண்பிக்கின்றன. எடுத்துக்காட்டாக, மலேசியாவின் இஸ்லாமிய சகோதரிகள் அமைப்பின் (Sisters in Islam) செயற்பாடுகளை எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்.

**வயது எல்லை**

முதிர்ச்சி நிலையை (Maturity) நீதிபதியாக நியமனம் பெறுவதற்கு அடிப்படை வயதெல்லையாக இஸ்லாமிய அறிஞர்கள் கருத்தொருமைப்பட்டுள்ளனர். எழுபது வயதைத் தாண்டியவரிடமும் சிறுவரிடமும் பொறுப்புக்களை ஒப்படைப்பதைத் தவிர்க்குமாறு அறிவுறுத்தும் நபிமொழி வயதெல்லை தொடர்பான சான்றாகக்கொள்ளப்படுகிறது (மத்கூர்,1964). ஆயினும், தொழுகை நடாத்துவதற்கு சிறுவர்கள் நியமிக்கப்பட்டுள்ளமை நீதிபதியாக நியமிக்கப்படுவதற்கும் தகைமையுடையவர் என்பதைக் காண்பிக்கிறது என்று ஷாபிஈ, இஸ்ஹாக், ஹஸன் போன்ற இமாம்கள் வாதிக்கின்றனர் (அல்-ஷவ்கானி,2002). தொழுகையில் இமாமாகப் பணிபுரிதல், நீதிபதியாகத் தீர்ப்பளித்தல் ஆகிய இரண்டுக்குமிடையிலான வேறுபாட்டைக் காண்பிக்கும் அறிஞர்கள் சிறுவர்களின் குற்றங்களுக்கு பாவம் எழுதப்படமாட்டாது என்ற நபிமொழியை (புஹாரி, ஹதீஸ்:3871) எடுத்துக்காட்டுவதாக (அல்-மாவர்தி,1994) குறிப்பிடுகிறார். அனைத்து தொழில் தகைமைகளுக்கும் வயதெல்லையை நிர்ணயிப்பது தற்கால வழக்கமாகும். இதற்கமைய அறிவாற்றல் போல வயது முதிர்ச்சி நீதிபதிப் பதவிக்கான தொழில் அனுபவத்தைப் பெற்றுக்

கொடுக்கும் என்பது திண்ணம். ஸஊதி அரேபியா சாதாரண நீதிபதிகளுக்கு இருபத்தைந்து வயதையும், உயர் நீதிமன்ற நீதிபதிகளுக்கு நாற்பது வயதையும் வயதெல்லையாக நிர்ணயித்திருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது (அப்துல் அஸீஸ், 1990).

**புலன் உறுப்புக்களில் குறைபாடற்றிருத்தல்**

இவ்வாறே புலனுறுப்பு அங்கவீனரான ஒருவர் நீதிபதியாக நியமனம் செய்யப்படுவது பற்றி பெரும்பான்மை இஸ்லாமிய அறிஞர்களிடையே ஏற்புநிலை இல்லை. ஆயினும், பார்வையிழந்திருந்த இப்னு உம்மி மக்தூம் (ரழி) அவர்கள் நபி (ஸல்) அவர்களின் பிரதிநிதியாக நியமனம் பெற்றிருந்தமை (அபூதாவூத், ஹதீஸ்:595) புலனுறுப்பு அங்கவீனர் நீதிபதிப் பதவிக்கு தகைமையுடையவர் என்பதைக் காட்டுவதாக சிலர் கருதுகின்றனர். தொழுகை நடாத்துதல் போன்ற விவகாரங்களிலேயே நபி (ஸல்) அவர்களின் பிரதிநிதியாக அவர் செயற்பட்டார் என்றும் இந்நபிமொழியின் ஆதாரபூர்வமின்மையையும் காரணமாகக் கொண்டு அதனைச் சான்றாகக் கொள்ள முடியாது என மறுத்துரைக்கப்படுகிறது (யூஸுப்,1986).

**நீதிபதியின் நடத்தை**

முஸ்லிம் சட்டத்துறை அறிஞர்களின் இலக்கியங்கள் நீதிபதியின் ஒழுக்கவியல் நடத்தை “அதபுல் காழி” பற்றி விரிவாக விவாதித்துள்ளன. ஒரு சாட்சியின் நடத்தையை அவர் சாட்சியாகப் பங்குகொள்ளத் தகைமையாக கருதும் இஸ்லாம், ஒரு நீதிபதியின் நடத்தை பற்றி வரையறுத்திருப்பது மிகப்பொருத்தமானதாகும். நீதிப்பரிபாலனம் பொருத்தமானதாகவும், வெளிப்படையானதாகவும் அமைவதற்கு நீதிபதியின் நடத்தை பற்றிய கரிசனை அவசியமாகும். ‘அத்ல்’ எனும் நீதமான நடத்தை நீதிபதியிடம் அமைந்திருப்பதை இஸ்லாமிய சட்டத்துறை பிரதானமானதாகக் கருதுகின்றது. பொதுவாக, இஸ்லாத்தில் அத்ல் பற்றிய கோட்பாடு மனித நடத்தை முழுவதையும் வியாபித்திருக்கின்ற அடிப்படை நியமமாகும். எனவே, அல் குர்ஆனின் பல வாசகங்கள் அத்ல் எனும் நீதமான நடத்தை பற்றி விபரிக்கின்றன (அல் குர்ஆன், 16:90). இதற்கமைய, நீதிப்பரிபாலனத்தில் நீதமான நடத்தை தவிர்க்க முடியாத அடிப்படை என்பதுவே அல் குர்ஆனின் கருத்தாகும். ‘மக்கள் மத்தியில் தீர்ப்பளிக்கும் போது நீதியாக நீங்கள் தீர்ப்பளிக்க வேண்டும்’ எனவும் அல்லாஹ் உங்களுக்கு கட்டளையிடுகிறான் (அல் குர்ஆன், 04:58).

'அத்ல்' என்பது ஒன்றை அதற்கேயுரிய இடத்தில், அந்தஸ்தில் காண்பது எனக் கொள்ளப்படுகிறது. 'அத்ல்"க்கு எதிர்ச் சொல் 'ழுல்ம்' எனும் அநீதியாகும். அநீதி அதன் எந்தப் பரிமாணத்திலும் தடை செய்யப்பட்டதாகும். 'எனது அடியார்களே, நிச்சயமாக என் மீது நானே அநீதியைத் தடை செய்துள்ளேன். அவ்வாறே, உங்கள் மீதும் அதனைத் தடை செய்துள்ளேன். எனவே, நீங்கள் ஒருவருக்கொருவர் அநீதி இழைக்க வேண்டாம்' என்பது ஹதீஸ் குத்ஸி வாசகமாகும் (முஸ்லிம், ஹதீஸ்:6837). இறை தூதுத்துவத்தின் இலட்சியம் மனிதனிடையே அநீதியை ஒழித்து நீதியை நிலைநாட்டுவதுவே.

**சமமாக நடாத்துதல்**

அத்ல் எனும் எண்ணக்கரு பக்கச்சார்பின்மை, வார்த்தைகளின் உண்மை, நேர்மை, அமானிதத்தைப் பேணுதல், பத்தினித்தனம், பாவம் செய்யாமை, சார்பு நிலையின்மை, நன்னடத்தை பேணுதல் போன்றவற்றை உள்ளடக்கியது எனலாம் (யூஸுப், 1986). அவற்றில் ஒன்றை நீதிபதி இழந்துவிடுவாராயின் அவரின் நியமனம் ரத்துச் செய்யப்பட்டு, தீர்ப்பும் ரத்துச் செய்யப்பட வேண்டும் என அல்-மாவர்தி (1994) கருதுகின்றார். நீதிபதி வாதி, பிரதிவாதிகளைச் சமமாக நடாத்துதலை 'அத்ல்' கோட்பாடு வேண்டி நிற்கின்றது. ஒரு வழக்காளியின் இன, மத, நிற, குல, கோத்திர, மொழி, தொழில், பதவி வேறுபாடு நீதிப்பரிபாலனத்தில் பாரபட்சமாக நடாத்தப்படுவதற்கு வழிகோலலாகாது. கலீபா உமர் (ரழி) அவர்களுக்கும் யூதன் ஒருவனுக்குமிடையிலான பிணக்கில் நீதிபதி ஷுரைஹ் அவர்களுடைய நடவடிக்கை வரலாற்றுப் புகழ்மிக்கது. தன்னை நீதிபதியாக நியமனம் செய்த உமர் (ரழி) அவர்களின் விளக்கத்தை வலிதற்றதாக்கி யூதனுக்கு சார்பாக தீர்ப்பை வழங்கினார் ஷுரைஹ் (அல்-உமரி, 2003). இவ்வாறே, கலீபா அலி (ரழி) அவர்கள் யூத வாதிக்கெதிராக தனது மகனைச் சாட்சியாக அமர்த்திய போது, தந்தைக்கு மகனின் சாட்சியம் ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதல்ல எனத் தெளிவுபடுத்தி யூதனுக்கு கவசத்தை உரித்தாக்கினார் நீதிபதி ஷுரைஹ் (ஷலபி, 1975). நீதிப்பரிபாலனத்தின் விசாரணையில் நீதிபதி உயர்ந்த நிலையில் சமத்துவத்தைப் பேணுவது அடிப்படை என்பதை இவ்வரலாற்றுச் சான்றுகள் காண்பிக்கின்றன.

வழக்காளிகளைச் சமமாக நடாத்துதல் என்ற செயற்பாடு அவர்களை வரவேற்றல், அவர்களுடன் மென்மையாக நடத்தல், கண்டிப்பாக நடத்தல், புன்னகைத்தல், கடுகடுத்தல், அவகாசம் வழங்குதல், விளக்கத்தைச் செவியுறுதல், சான்றுகளைச் சமர்ப்பிக்க வாய்ப்பளித்தல், விபரங்களை விபரித்தல் போன்ற அனைத்திலும்

வேறுபாடு காண்பித்தல் தகாது என்பதாக விளக்கப்படுத்த முடியும் என இஸ்லாமிய அறிஞர்கள் குறித்துள்ளனர் (அஹ்மத், 1996).

> ‘முஸ்லிம்கள் மத்தியில் தீர்ப்பளிக்க முற்படுபவர் அவர்களிடையே பேச்சிலும், சமிக்ஞையிலும், உட்கார வைப்பதிலும் நீதத்தைக் கைக்கொள்ளட்டும். வழக்காளிகளில் ஒருவர் மீது தனது சப்தத்தை உயர்த்தாத நிலையில் மற்றவர் மீதும் தனது சத்தத்தை உயர்த்தாமல் இருக்கட்டும்’(தாரகுத்னீ, ஹதீஸ்:10, பா.04).

என நபியவர்கள் அறிவுறுத்தியமையை இதற்கான சான்றாகக் கொள்ள முடியும். திருட்டுக் குற்றம் நிரூபணமான மக்ஸூமி உயர் கோத்திரப் பெண்ணின் தண்டனையைக் கைவிடுமாறு நபி (ஸல்) அவர்களிடம் சிபாரிசு செய்யப்பட்ட போது, நீதிப்பரிபாலனத்தில் சமமாக நடாத்துதலின் அவசியத்தைப் பின்வருமாறு வலியுறுத்தினார்கள்:

> ‘அல்லாஹ்வின் தண்டனை விடயத்தில் உங்களுக்கு முன்னால் வாழ்ந்த சமுதாயத்தில் சமூக அந்தஸ்துமிக்கவன் திருடினால், அவனுக்கு தண்டனையை நிறைவேற்றாது விட்டுவிடுவர். பலவீனன் திருடினால் தண்டனையை நிறைவேற்றுவர். அல்லாஹ்வின் மீது ஆணையாக! முஹம்மதின் மகள் பாத்திமா திருடினாலும் அவரது கையை வெட்டிவிடுவேன்’ (புகாரி, ஹதீஸ்:3288).

கலீபா உமர் (ரழி) அவர்கள் நீதி விசாரணை முறைமை பற்றி கூபாவின் நீதிபதி அபூ மூஸா அல்அஷ்அரி (ரழி) அவர்களுக்கு எழுதிய கடிதம் சமத்துவமாக நடத்துதல் தொடர்பான நியமங்களைப் பின்வருமாறு முன்வைக்கிறது: ‘உமது மன்றத்தில், உமது முகபாவனையில், உமது தீர்ப்பில் மக்களுக்கு நம்பிக்கையூட்டுவீராக. மதிப்புக்குரியவன் உமது சார்புநிலையை எதிர்பார்க்காதிருக்கட்டும். நலிந்தவன் உமது நீதியில் நம்பிக்கை இழக்காதிருக்கட்டும்’ (இப்னுல் காஸ், 2007).

இவ்வாறே, கலீபா உமர் (ரழி) அவர்களுக்கும், உபை இப்னு க.்.ப் (ரழி) அவர்களுக்கும் இடையிலான காணி தொடர்பான வழக்கொன்றில் ஸைத் இப்னு தாபித் (ரழி) அவர்கள் கலீபா உமர் (ரழி) அவர்களை விருப்பில் அமர வைக்க முனைந்தார். இதனைக் கண்ணுற்ற கலீபா உமர் (ரழி) அவர்கள், ‘ஸைதே, உமது

விசாரணையில் நீர் ஆரம்பத்திலேயே அநீதி இழைத்து விட்டீர். நானும் ஒரு பிரதிவாதியாகவே வந்திருக்கிறேன். என்னையும் வாதியுடன் அமர வையுங்கள், உமரையும் ஏனைய குடி மக்களையும் சமமாகக் கருதும் வரை ஸைத் நீதியின் வாயிலை அடையமாட்டார்' எனக் குறிப்பிட்டமை (அல்-உமரி, 2003) நீதி செலுத்துவதில் சமத்துவத்தைப் பேணுவதின் முக்கியத்துவத்தைக் காண்பிக்கிறது.

இஸ்லாமிய சட்டத்துறை இலக்கியங்கள் நீதிபதி பக்கச்சார்பாக நடந்து விடுகின்ற வாய்ப்புக்களைக் கொண்டிருப்பதைத் தவிர்க்க வேண்டும் என்றே அறிவுறுத்துகின்றன. இந்த வகையில்,நீதிபதி வணிகத்தில் ஈடுபடுதல், தொழில் புரிதல் போன்றன அவருக்கு மக்களோடு நெருங்கிய தொடர்பை ஏற்படுத்தி, அவர்களுக்குச் சார்பாக செயற்படவும் மதிப்பை இழக்கவும் நீதிப்பரிபாலனத்தில் ஈடுபடும் அவகாசத்தை குறைக்கவும் துணைசெய்யுமென்றே கருதப்படுகிறது. ஆகவே தான், 'நீங்கள் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடாதீர்கள்' என நபி (ஸல்) நீதிபதிகளுக்குக் கட்டளையிட்டார்கள் (அப்துர் ரஸ்ஸாக், ஹதீஸ்:15290).

**நீதிபதியும் அன்பளிப்புக்களும்**

இஸ்லாமிய மூல ஆவணங்கள் நீதிபதி அன்பளிப்புக்களை ஏற்றுக் கொள்வதை முற்றாகத் தடை செய்கிறது. ஷரீஆவில் அதிகாரிகளுக்குரிய அன்பளிப்புகள் எல்லை மீறலாகவே கணிக்கப்பட்டு தடை விதிக்கப்பட்டுள்ளது (பைஹகீ, பா.10, ப.138). நீதிபதிக்கான அன்பளிப்பு இலஞ்சமாகவே கொள்ளப்பட முடியும் என்பதை பனூ அஸத் கோத்திரத்தைச் சேர்ந்த இப்னு லுத்பியா எனும் நபித்தோழர் ஸகாத் பொருளை வழங்கியவர்களிடமிருந்து தனக்கான அன்பளிப்புக்களையும் பெற்றுக் கொண்டமையை நபியவர்கள் வன்மையாகக் கண்டித்தமை காண்பிக்கிறது (புஹாரி, ஹதீஸ்:2457). இவ்வாறு நீதிபதி அன்பளிப்புக்களைப் பெறுவது கண்டிக்கத்தக்க பெரும்பாவமும், தடை செய்யப்பட்டதும் எனக் கருதுகிறார் அல்மாவர்தி (1972).

நீதிபதி பெறும் அன்பளிப்பை அல்-ஹுமைழி (1989) மூன்றாக வகைப்படுத்துகிறார். ஒன்று, வழக்குடன் சம்பந்தப்பட்டவர் வழங்கும் அன்பளிப்பு. இது இலஞ்சமாகும். இரண்டு,நீதிபதிப் பதவியினையும் சமூக அந்தஸ்தினையும் கருத்திற் கொண்டு வழங்கப்படும் அன்பளிப்பு. இவ்வன்பளிப்பை ஏற்றுக் கொள்வது தடை செய்யப்பட்டது. மூன்றாவது, நீதிபதியின் பதவியைக் கருத்திற் கொள்ளாது வழங்கப்படும் அன்பளிப்புக்கள். இவ்வன்பளிப்புக்கள் பெற்றுக் கொள்ளத்தக்கவை என்று சிலர் கருதிய போதிலும் அவற்றையும் தவிர்ந்து கொள்வது நீதிபதியின்

தூய்மையையும் பேணுதலையும் காண்பிக்கவல்லது (அல்-ஸர்ஹஸி, 1912). ‘எவரிடமிருந்தும் அன்பளிப்புக்களைப் பெற்றுக் கொள்ளாதிருப்பதே மிகச்சிறந்தது என்கிறார் இப்னு அபித்தம் (1987).

மேலும், வழக்காளியினால் நீதிபதிக்கென ஏற்பாடு செய்யப்படும் விசேட விருந்துபசாரத்தில் அவர் கலந்து கொள்வது பொருத்தமானதல்ல என்று இஸ்லாமிய சட்டத்துறை குறிப்பிடுகின்றது. அத்தகைய விருந்துபசாரம் நீதிபதியின் நீதிப்பரிபாலனத்தில் ஆதிக்கம் செலுத்தி வழிபிறழச் செய்து விடலாம் என்ற அச்சமே இதற்கான காரணமாகும். இத்தகைய விருந்துகளில் நீதிபதி கலந்து கொள்வது வெறுக்கத்தக்கது என பகவி (1998) அவர்கள் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறே, வழக்காளிகளுக்கு நீதிபதி விருந்தளிப்பதும் பொருந்தாச்செயற்பாடாகும். அலி (ரழி) அவர்களிடம் ஒருவர் விருந்தாளியாகத் தங்கி, பின்னர் தனது முறைப்பாட்டை முன்வைத்த போது, அவ்வழக்கை முன்னெடுக்க அலி (ரழி) அவர்கள் மறுத்து விட்டார்கள் (பைஹகீ, ஹதீஸ்:20974).

ஒரு குறைந்த பரிணாமத்திலேனும் நீதித்துறையில் இலஞ்சம் உள்நுழைந்து விடாது தடுப்பதில் இஸ்லாம் பெரிதும் கவனம் கொண்டுள்ளது என்பதை நீதிபதி அன்பளிப்பு பெறுதல், விருந்தோம்பலில் கலந்து கொள்தல் பற்றிய வரையறைகள் காண்பிக்கின்றன. ஏனெனில், பொது வாழ்வில் ஈடுபாடு கொள்வோர் இலஞ்சம் பெறுவது பெரும் குற்றமாகும் என்பது இஸ்லாத்தின் முடிவு. கலீபா உமர் (ரழி) அவர்களுக்கு ஒட்டகத்தின் சந்துப் பகுதியை அன்பளிப்பாக வழங்கியவன் அப்பகுதியை சுட்டிக் காட்டி தீர்ப்பைப் பெற முயன்ற போது கலீபா உமர் (ரழி) அவர்கள் அன்பளிப்புக்களை பெற வேண்டாமென்றும் அவ்வாறு பெறுவது இலஞ்சம் ஆகும் என்றும் ஆணை பிறப்பித்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இலஞ்சம் பெறுவதும், இலஞ்சம் வழங்குவதும், அதைப் பெற்றுக் கொடுக்க இடைத்தரகராக செயற்படுவதும் சபிக்கப்பட்ட செயற்பாடுகளாகும் (பைஹகீ, ஹதீஸ்:20974). இலஞ்சம் பெற்று தீர்ப்பளிப்பவன் நரகை அடைவான் என்ற நபிமொழி நீதித்துறையில் இலஞ்சத்தின் ஊடுருவலை தெளிவாக தடை செய்கிறது (திர்மிதீ, ஹதீஸ்:1336). இவ்வாறு இலஞ்சம் வழங்கி தீர்ப்பை எதிர்பார்ப்பது, அதனைப் பெற்று சார்பாகத் தீர்ப்பளிப்பது இறை நிராகரிப்புக்கு சமமானவை என இப்னு மஸ்ஊத் (ரழி) அவர்கள் குறிப்பிடுகிறார்கள் (வகீஉ,918). பொதுமக்களின் அன்பளிப்புப் பெறுவதை தவிர்க்கவே நீதிபதியினதும், அவரது குடும்பத்தினரதும் வாழ்க்கைச் செலவை அரசாங்கம் பொறுப்பேற்கும் நடைமுறையை ஆரம்ப காலம் முதல் முஸ்லிம்

ஆட்சியாளர்கள் கொண்டிருந்தனர். நீதிபதிக்கான சம்பளம் இத்தகைய செயற்பாட்டிலிருந்து அவரை பேணச் செய்யுமென்கிறார் அல்-ஸுஹைலி (2002).

தற்கால நீதிப்பரிபாலனத்தில் ஒவ்வொரு நீதிபதியும் வெளிவாரி செல்வாக்கிற்கு உட்படுவதைத் தவிர்க்க நடத்தைக் கோவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. நீதிப்பரிபாலனச் செயற்பாடுகள் நீதிபதியை ஒரு பொதுச் சேவையில் ஈடுபடுத்துகிறது. எனவே, அவர் ஒரு பொதுச் சொத்து. அவருடைய வாழ்வு திறந்த புத்தகமாக காணப்படல் வேண்டும். அவருடைய கொடுக்கல் வாங்கல்கள் தனது அதிகார செயற்பாடுகளுடன் எவ்விதத்திலும் தொடர்புற்றிருத்தலாகாது. அவருடைய கொடுக்கல் வாங்கல்கள் நிதிச் சுற்றுநிரூபத்துக்கேற்ப அமைதல் அவசியம். அவரது நன்னடத்தையை, நம்பகத்தன்மையை விமர்சனத்திற்குட்படுத்தும் எச்செயற்பாடும் நீதித்துறையின் மீது நம்பிக்கையை இழக்கச் செய்யும். பெறுமதியான பண பரிசிலை அவர் பெறுவதை முற்றாக தவிர்த்தல் வேண்டும். துர்நடத்தைச் செயற்பாட்டில் குற்றம் சுமத்தப்பட்டவராக ஒரு நீதிபதி ஆக்கப்படுவது அவர் மீதும் அவரது நடத்தை மீதும் ஐயங்களை தோற்றுவிக்கும். ஒரு நீதிபதியின் நடத்தை ஏனையோருக்கு முன்மாதிரியாகவும் மரியாதையை பெற்றுக் கொடுப்பதாகவும் அமைதல் வேண்டும் என்பதை நீதி ஒழுக்கவியல் தத்துவங்கள் காண்பிக்கின்றன.

**முடிவுரை**

இஸ்லாத்தில் வணக்க வழிபாடுகளுள் ஒன்றாக கருதப்படும் நீதிப்பரிபாலனத்தில் நீதிபதி பிரதானமானவர். இந்தவகையில் நீதிபதியின் தகைமை, நடத்தை பற்றி இஸ்லாமிய சட்ட மரபு அதிக கரிசணை கொண்டுள்ளது. சட்ட விடயப்பரப்பு அதன் மூலங்கள் போன்றவற்றில் கல்வியறிவை, தொழில் திறன்களை நீதிபதி பெற்றிருப்பது இன்றியமையாததாகும். நீதிபதியின் பால்நிலை, சமயம் என்பன தொடர்பான விடயங்கள் பற்றிய வாதப்பிரதிவாதம் உண்டு. ஆயினும், நீதிபதியின் நன்னடத்தை, நேர்மை, முன்மாதிரியான நடத்தை, பக்கச்சார்பின்மை போன்ற நீதிபதி கொண்டிருக்க வேண்டிய 'ஆதாப் அல்-காழி' அம்சங்களை இஸ்லாமிய சட்டத்துறை பிரதானமானவையாகக் கொள்கிறது.

**அடிக்குறிப்புகள்:**

1. 'உம்மிடம் தீரப்புக்காக ஒரு விடயம் முன்வைக்கப்பட்டால், எவ்வாறு தீர்ப்பளிப்பீர்கள் என்று முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் முஆத் இப்னு ஜபல் (ரழி) அவர்களிடம் வினவிய போது,'அல்லாஹ்வின் வேதமான அல்குர்ஆனைக் கொண்டு தீர்ப்பளிப்பேன்' என்று பகர்ந்தார்கள்.

அல்லாஹ்வின் வேதத்தில் அதற்கான தீர்வைப் பெறாவிட்டால் (என்ன செய்வீர்) என வினவிய போது,'இறைத்தூதரின் 'அஸ்ஸுன்னா'வைக் கொண்டு தீர்ப்பளிப்பேன்' என்று பதிலளித்தார்கள். (திர்மிதி, ஹதீஸ் 3594)

2. 'இரண்டு நண்பர்கள் பகலுணவுக்காக அமர்ந்தார்கள். ஒருவரிடம் ஐந்து உரொட்டிகளும், மற்றவரிடம் மூன்று உரொட்டிகளும் இருந்தன. அவ்விருவரும் உண்ண ஆரம்பித்த போது, அவ்விடத்திற்கு ஒரு பிரயாணி வந்தான். அவ்விருவரும் அவனை தம்முடன் பகலுணவைப்பரிமாற அழைத்தனர். உணவருந்திய பின்னர் அவன் எட்டு திர்ஹம்களைக் கொடுத்தான். ஐந்து உரொட்டிகளை வைத்திருந்த நண்பர் தனக்கு ஐந்து திர்ஹம்களை எடுத்துவிட்டு, மூன்று உரொட்டிகளை வைத்திருந்த நண்பருக்கு மூன்று திர்ஹம்களை கொடுத்தார். நண்பர் 'அதனைப் பொருந்திக் கொள்ள மாட்டேன்' என்று சண்டையிட்டார்.இப்பிரச்சினை அலி (ரழி) அவர்களிடம் முன்வைக்கப்பட்ட போது,'இதுவொரு சிறிய விடயம். இதை நீதிமன்றத்திற்குக் கொண்டு செல்வதை விட இருவரும் ஓர் இணக்கப்பாட்டுக்கு வருவதே சிறந்தது என்று கூறிவிட்டு, இரண்டாமவரிடம் 'நீர் மூன்று திர்ஹம்களை வைத்துக்கொள். சண்டையிடுவதை விட்டுவிடு' என்று அறிவுரை பகர்ந்தார்கள்.அதற்கு அம்மனிதன் 'இல்லை, நீங்கள் இவ்விடயத்தை விசாரித்து நியாயப்படி தீர்ப்பு வழங்க வேண்டும்' என்று அலி (ரழி) அவர்களை வலியுறுத்தினான். அதற்கிணங்க, அலி (ரழி) அவர்கள் அவ்விருவரையும் விசாரித்துவிட்டு 'நீதி நியாயப்படி ஐந்து உரொட்டிகளை வைத்திருந்தவருக்கு ஏழு திர்ஹம்களும், மூன்று உரொட்டிகளை வைத்திருந்த நண்பருக்கு ஒரு திர்ஹம் மாத்திரமும் உரித்தானது' என்று தீர்ப்பு வழங்கினார்கள். (குலாம் முர்தழா ஆஸாத், 1987)

## உசாத்துணைகள்


Abdul Azeez, Aal al-Sheikh (1990). *Lamhaath Hawla al-Qalaa fi al-Mamlakathi al-Arabiyya al-Saudiya*, Riyad: Aalam al-Fawaayid.

Abdul Razzaaq, Abu Bakr bin Hamaam (1982). *Muṣannaf Abdul Razzaaq*. Beirut: al-Maktab al-Islaami.

Abu Dawood, Sulayman (1990). *Sunan Abi Dawood*, Beirut: Dar al-Kitab al-Arabi.

Ahmad, Fuad Abdul Munyim (1996). *Ibnu Kaldoon wa Risaalatuhu lil Qulaat*, Riyad: Darul Wathan.

Al-Humayli, Abdur Rahman (1989). *al-Qalaa wa Nilaamuhu fil Kitabi was Sunnah*, Makkah: Jamia Ummil Qura.

Al-Maawardi, Ali bin Muhammad (1972). *Adab al-Qaali*, Bagdad: Mathba-at al-Aabi.

Al-Maawardi, Ali bin Muhammad (1994). *al-Ahkam al-Sulthaniyya fil Wilaayath al-Deeniyya*, Beirut: Darul Kitab al-Arabi.

Al-Quran (1993), Madinah:Malik Fahd Publishers for Al-Quran printing.

Al-Sarkhasi, Shamsuddeen (1912). *Al-Mabsooth*, Beirut: Dar al-Ma'rifa

Al-Shar'eeni, Muhammad bin Ahmad (1958). *Mughni al-Muhtaaj*, Cairo: Multhazam publications

Al-Shawkānī, Muḥammad bin ʿAli (2004). *Nayl Al-Awtaar*. Beirut: Bayt al-Afkaar al-duwaliyyah.

Al-Tirmithi, Muhammad bin Eesa (1985). *Sunan Tirmithi, Beiruth*: Dar Ihya al-Thurath.

Al-Umari, Akram Liya (2003). *Asrul Khilafath al-Raashitha*, fourth edition, Riyad: Maktabat Ubaikan.

Al-Zuhayli, Wahabat (2002). *Al-Fiqh al-Islaami wa Adillatuhu*, Beirut: Dar al-Fikr.

Bayhaqi, Ahmad bin al-Hasan (1925). *al-Sunan al-Kubra*, Hydrabad: Majlis Dayirathil Ma-aarif.

Buhari, Muhammad bin Ismail (1987). *al-Jaami al-Saheeh al-Mukhtasar*, Beirut: Dar Ibn Katheer al-Yamama.

Ibn Abee Shayba (1989). *al-Musannaf*, Beirut: Dar Al-Fikr.

Ibn Abit Dam, Ibrahim (1987). *Kitab Adab al-Qalaa*, Beirut: Darul Kutub al-Ilmiyya.

Ibn al-Qaas, Ahmad (2007). *Adab al-Qaali*, Beirut: Darul Kutub al-Ilmiyya.

Ibn al-Qayyoom, al-Jawziyya (2002). *Ihlaam al-Muwaqqieen*, Riyad: Dar Ibn al-Jawzi.

Madkoor, Muhammad Salaam (1964). *Al-Qalaa fi al-Islam*, Cairo: Dar al-Nahla al-Arabiyya.

Muslim, Ibn al-Hajjaaj al-Naysaburi (2005). *Saheeh Muslim*, Beirut: Dar Ihya Liththuraathil Arabi.

Najibah, M.Zin (2012) The Training, Appointment, and Supervision of Islamic Judges in Malaysia, *Pacific Rim Law & Policy Journal* Vol.21, No:1, pp.115-131.

Shalabi, Ahmad (1975). *Thaareeh al-Thashree' al-Islaami wa Thaareeh al-Nulum al-Qalaayiyya fi al-Islam*, Cairo: Maktabat al-Nahla al-Misriyya

Thabyani, Bandar (2000). *Taareeh al-Qalaa*, Riyad: Higher Education Ministry.

Wakee, bin al-Jarraah (918). *Akhbaar al-Qulaat*, Lebanan: Aalamul Kutub.

Yusuf, Abd al-Haseeb Abd al-Salam (1986). *Al-Qaali wa al-Bayyina*, Kuwait: Maktabat al-Mu'la.